கோ.ம.சா.1– கோமதி L.A.O.P.No. 438/2022 22.09.2025

கோ.ம.சா.2, 3 ம் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

கோ.சா.ஆ.7 எனது சித்தப்பா எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரத்தில் எனது பாட்டி சண்முகவேலம்மாள் சொத்தை பொறுத்து செட்டில்மெண்டில் சண்முகவேலம்மாள் உயிருடன் இருக்கும்போது எனது சித்தப்பா எனது அப்பாவுக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தாரா என்றால் என் சித்தப்பா எல்லா சொத்தையும் பொறுத்து விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார். மேற்படி விடுதலை பத்திரத்தில் என் சித்தப்பாவும், எனது அப்பாவும் முக்கியஸ்தர்களை கொண்டு பஞ்சாயத்து செய்ததாக கோ.சா.ஆ.7 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை. கோ.சா.ஆ 7 விடுதலை பத்திரம் எழுதிய அதே தேதியில் கோ.சா.ஆ.4 செட்டில்மெண்ட் பத்திரம் என் தாயாருக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோ.சா.ஆ 4 செட்டில்மெண்ட் பத்திரத்தில் எனது சித்தப்பா, எனது தகப்பனாருக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்ததை பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எனது ஊரில் சோலைச்சாமி என்ற பெயரில் எனது சித்தப்பாவை தவிர வேறு யாரும் அந்தபெயரில் வேறு யாரும் கிடையாது. எனது சித்தப்பாவை தவிர வேறு யாரும் அதே பெயரில் இல்லை என்று நான் சொன்னாலும், கோ.சா.ஆ 7 ல் பஞ்சாயத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. மேற்படி விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்த பின்னரும் கோ.சா.ஆ.7 விடுதலைப் பத்திரத்தை பொறுத்து என்னென்ன சொத்துக்கள் யார் யாருக்கு எழுதிக் கொடுத்ததை பொறுத்து என் தாயாரிடமோ, என் பாட்டியிடமோ கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் என் தாயாருக்கு விபரம் எதுவும் தெரியாது. நான் தாக்கல் செய்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் மணிப்பாறைப் பட்டி கிராமம் சர்வே எண்.396 பட்டா எண். 99 என்றும், அதன் விஸ்தீரன் 2 ஏக்கர் 22 செண்ட் என்றும் காலம் 12 மற்றும் 16 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதே கோ.சா.ஆ.2 காலம் 25, 29 ஆகியவைகளில் அதன்

விஸ்தீரணம் 2 ஏக்கர் 52 செண்ட் பட்டா எண்.133 சண்முக வேலம்மாள் என்ற பெயரில் பதிவாகியுள்ளது என்று சொன்னால் சரிதான். கோ.சா.ஆ.2 ல் காலம் 1, 2 ல் சர்வே எண்.265/4 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் கருப்பம்மாள் 1977 ல் எனது பாட்டி வீடான கூத்திப்பாறையில் வைத்து இறந்து விட்டார். எனது தாயார் இறப்பை எப்போது பதிந்தோம் என்றால் எனது மாமாவைத் தான் கேட்க வேண்டும். இறந்தவுடன் பதிவு செய்யப்பட்டது. எனது தாயார் இறப்பை கூத்திப்பாறையில் வைத்து பதியப்பட்டது. நான் தாக்கல் செய்த எனது தாயார் கருப்பாம்மாள் இறப்பு சான்றிதழ் 26.05.2016 அன்று பதிவு செய்ததாக கோ.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தாயார் கருப்பம்மாள் 1977 ல் இறந்த பின்னர் 2016 ல் பதிவு செய்ததாக சொல்லியது எதன் அடிப்படையில் பதிவுக்கு கொடுத்தேன் என்றால் எனக்கு தெரியாது. எனது மாமாவுக்குத்தான் தெரியும். எனது மாமா பெயர் பூலோகபாண்டி. அவர் தற்போது உயிருடன் இல்லை. எனது தாயார் இறப்பு சான்றிதழை எங்கு வாங்கினோம் என்றால் அருப்புக்கோட்டையில் இறப்பு சான்றிதழ் வழங்கும் அலுவலகத்தில் வாங்கினேன். அலுவகத்தின் பெயர் எனக்கு தெரியாது. எனது தாயார் இறப்பு சான்றிதழ் நகல் வாங்குவதற்கு அரசாங்கத்திற்கு பணம் ஏதும் செலுத்தவில்லை. எனது தாயார் இறப்பு சான்றிதழ் நகல் வாங்குவதற்கு நான்தான் சென்றேன். கோ.சா.ஆ.6 05.01.2022 ல் வாங்கியுள்ளது என்றால் சரிதான். எனது பாட்டி சண்முகவேலம்மாள், எனது தாயார் கருப்பம்மாள், எனது அப்பா சேதுராஜ், எனது சித்தப்பா சோலைச்சாமி ஆகியோர்களில் எனது தாயார் கருப்பம்மாள் தவிர வேறு யாருக்கும் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சேதுராஜ் இறந்த பின்னர் குடும்ப ஓய்வூதியம் பெற எனது தகப்பனாரின் மேற்படி இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் யார் மூலம் வாங்கி ஓய்வூதியம் பெற்றோம் என்றால் என் மாமா மூலம் வாங்கி தாக்கல் செய்தோம். எனது அப்பா, எனது பாட்டி, எனது சித்தப்பா

ஆகியோர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை வட்டாட்சியரிடம் இருந்து வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தாயார் கருப்பம்மாள் வீட்டில் வைத்துதான் இறந்தார். எனது தாயார் 1977 ல் இறந்த பின்னர் எனது தாயாரின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் கேட்டு யாரிடம் மனு செய்தேன் என்றால் வட்டாட்சியரிடம் மனு செய்தேன். நான் வாரிசு சான்றிதழ் கேட்டு எந்த ஆண்டு, எந்த மாதம் மனு செய்தேன் என்றால் எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. எனது தாயாரின் வாரிசு சான்றிதழ் வாங்க நான் அரசுக்கு எவ்வித பணமும் செலுத்தவில்லை. எனது தாயாரின் வாரிசு சான்றிதழ் கேட்டு நான் மனு செய்து எத்தனை நாட்கள் கழித்து வாரிசு சான்றிதழ் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. அரசு அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்றால் இறந்ததற்கான உண்மை விபரம் விசாரித்துதான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். எனது தாயார் 1977 ல் இறந்த பின்னர் 2022 ல் வாரிசு சான்றிதழ் எதற்காக மனு செய்து வாங்கினேன் என்றால் காரணம் எதுவும் இல்லை. எனது தாயாரின் வாரிசு சான்றிதழ் கொடுக்கும் போது அதிகாரிகள் எனது ஊரில் வந்து யார் யாரை விசாரித்தார்கள் எனறால் நிறைய நபர்களை விசாரித்தார்கள். ஆர்ஜித அதிகாரி தரப்பில் ஆர்ஜித நிலங்களையும், இதர நிலங்களை பொறுத்து ஆர்ஜிதம் செய்யப்போவதாக முதன்முதலில் 23.02.2015 ல் அரசாணை வெளியிட்டு அதனை தொடர்ந்து தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நிலம் எடுத்ததை பொறுத்து எனக்கு வீட்டிற்கு அறிவிப்பு வந்தது. அரசாங்கத்தில் நிலம் எடுப்பதை பொறுத்து உள்ளூர் விளம்பரமாக கிராம நிர்வாக அலுவலர், சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகம், சிப்காட் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 10.07.2015 ல் விளம்பர படுத்தியதாக தீர்வத்தில் குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு

தெரியாது. மேற்படி நிலம் எடுக்க போவது பற்றி இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் வாங்குவதற்கு முன்பு தெரியும். மேற்படி நிலம் எடுப்பது சம்பந்தமாக சிப்காட் நில எடுப்பு அலுவலகத்திற்கு விசாரணைக்கு ஆஜராகும்படி அடிக்கொரு தடவை அழைத்ததின்பேரில் விசாரணைக்கு ஆஜரானேன். அருகில் உள்ள நில உரிமையாளர்களும் ஆஜரானார்கள் என்றால் சரிதான். நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் 4 அல்லது 5 தடவை ஆஜரானேன். நான் 10.08.2021ல் நில எடுப்பு தீர்வை விசாரணைக்கு ஆஜராகி வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப் படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.